**நில அளவை சபை**

(2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க அளவையியல் சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது)
“மத்திய மட்ட முகாமைத்துவச் சேவை” வகைசார் செயலாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல்

1. நில அளவைச் சபையின் செயலாளர் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக அல்லது நிறுவனம் ஒன்றின் பட்டம் ஒன்றினைப் பெற்ற பின் அரச கூட்டுத்தாபன, சபை அல்லது நியதிச் சட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவம் மட்ட பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரியின் வயது 2022.09.09 ஆந் திகதியன்று 22 வயதுக்கு குறையாது 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அவர்கள் செயலாளர் பதவிக்கு பணிக்கப்படுகின்ற கடமைகளையும் பொறுப்புக்களையும் சிறப்பாக நிறைவேற்றத் தேவையான உடல், உளத் தகைமை பெற்றிருப்பதோடு சிறந்த குணநலத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. மேற்படி பதவிக்கான கடமைப் பொறுப்புக்களை www.landsurveycouncil.org என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

4. ஒருவர் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர் தேர்ந்தெடுக்கப்படுவர். எவ்வாறாவது பலவந்தப்படுத்த முயற்சித்தால் அவருக்கு துரதிஷ்டவசமான நிலை ஏற்பட இடமுண்டு.

5. சம்பள அளவுத்திட்டம்.- MM-1-1 : ரூபா 53,175.00 - 10 × 1,375 - 15 × 1,910 - ரூபா 95,575.00

6. இந்நியமனம் நிரந்தரமானது. அத்துடன் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. ஊழியர் சேமலாப நிதியும், ஊழியர் நம்பிக்கை நிதியும் உரித்துடையது.

7. விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வி மற்றும் தொழிற் தகைமை, சேவை அனுபவம், கணினி பயன்பாடு தொடர்பான அறிவு பற்றி குறிப்பிடப்பட்ட விண்ணப்பமொன்றை தாமாக தயாரித்து 2022.09.09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “தலைவர் நில அளவைச் சபை, இல. 150, பர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு - 05” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கல்வி மற்றும் தொழிற் தகைமை சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய ஆளடையாள அட்டை ஆகியவற்றின் நிழற் பிரதி (Photo copy) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ஏ. திஸாநாயக்க,
தலைவர்,
நில அளவைச் சபை.

2022.08.15.

08-201